**தன்னாட்சி, மக்களின் குரல் (Voice of People),**
**அறப்போர் இயக்கம், தோழன் இயக்கம் மற்றும்**
**Institute of Grassroots Governance (IGG)**

**முகவரி:** 69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.
**மின்னஞ்சல் :** thannatchi@gmail.com
**தொடர்புக்கு:** நந்தகுமார் சிவா, பொதுச் செயலர், தன்னாட்சி/ 90032-32058

---

**02.06.2021**

**பத்திரிகைச் செய்தி**

# ஒன்றிய மற்றும் மாநில நிதிக்குழு நிதிகளை ஊராட்சிகளுக்கு உடனே விடுவிக்கவும்!

## தமிழக அரசுக்கு சமூக இயக்கங்களின் கோரிக்கை!

கொரோனா தொற்றை ஒழித்து, மாநிலம் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக எடுத்து வரும் தமிழ்நாடு அரசைப் பாராட்டுகின்றோம்.

இருப்பினும், கடந்த 2020 இல் முதல் அலை காலகட்டத்திலிருந்ததை விட, தற்போது கிராம அளவில் தொற்றுப்பரவல் அதிகரித்து வருவதும், இறப்புகள் அதிகரிப்பதும் கண்கூடாக தெரிகிறது. கிராமப் புறங்களில் கொரோனா தடுப்பு பெரும் சவாலாக இருக்கப்போகிறது என்று நிபுணர்கள் நம்மை எச்சரிக்கின்றனர்.

சுகாதாரப் பணியாளர்களுடன், ஊராட்சி பிரதிநிதிகள் வீடு வீடாகச் சென்று, அனைத்து மக்களுக்கான உடல் பரிசோதனை உள்ளிட்ட விஷயங்களை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இருப்பினும், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பாதிக்கப்பட்ட நபர்களைத் தனிமைப்படுத்தி, சிகிச்சை வழங்கத் தேவையான இடங்களை உருவாக்குவதற்கும், பொது முகாம்களை அமைக்கவும் அதற்கான உணவு மற்றும் பிற ஏற்பாடுகளைச் செய்வதற்கும் கொரோனா தடுப்பு சிறப்பு நிதி எதுவும் இதுவரை கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படவில்லை.

அதுமட்டுமல்லாமல், பொதுவாக ஒவ்வொரு ஊராட்சிக்கும் மாதம்தோறும் விடுவிக்கப்படும் மாநில நிதிக்குழு நிதி, இந்த ஆண்டு மார்ச் 2021 மாதத்திலிருந்து ஊராட்சிகளுக்கு வந்து சேரவில்லை என்று அறிய வருகிறோம். மேலும், கடந்த 2020-21 நிதியாண்டின் மாநில நிதிக்குழு நிதியே இன்னும் சரியாக விடுவிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

மாநில நிதிக்குழு நிதியை வைத்துக் கொண்டு தான் ஒவ்வொரு கிராம ஊராட்சியும், தங்கள் பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்க முடியும். ஊராட்சி செயலர், தூய்மைப் பணியாளர்கள், குடிநீர் மின்மோட்டார் இயக்குபவர்கள் எனப் பலருக்கும் ஊதியம் வழங்க வேண்டியுள்ளது. மேலும் சில பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு இந்த நிதியையே பெரும்பாலான ஊராட்சிகள் சார்ந்துள்ளன.

அதிக வருமானம் உள்ள நகரங்களை ஒட்டியுள்ள ஊராட்சிகளுக்கு இந்த நிதி கிடைத்த பிறகு தான் பணியாற்ற வேண்டும் என்ற நிலை இல்லை. ஆனால் பெரிய தொழில் நிறுவனங்களோ, வணிக வளாகங்களோ இல்லாத கிராம ஊராட்சிகளுக்கு, சொந்த வரி வருவாய் இல்லாத நிலையில், மாநில நிதிக்குழு நிதி என்பது அவை இயங்குவதற்கான அடிப்படைத் தேவையாகும். இப்படிப்பட்ட சொந்த நிதி வருவாய் இல்லாத ஊராட்சிகள் தான் தமிழகத்தில் பெரும்பான்மையாக உள்ளன. ஆனால், அந்த நிதியை அரசு விடுவிக்காமல், கடந்த 3 மாதங்களாக காலம் தாழ்த்தி வருவது சிக்கலை மேலும் அதிகப்படுத்தி உள்ளது.

அதேபோல, 15 வது ஒன்றிய நிதிக்குழு நிதியின் அடிப்படை நிதியைக் கொண்டு, 11 வது அட்டவணையில் உள்ள பொருள்களின் கீழ் வரும், உள்ளூர் தேவைகளுக்கானப் பணிகளைச் செய்ய (சம்பளம் மற்றும் நிறுவனச் செலவுகள் தவிர்த்து) கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் இருக்கிறது. 15வது ஒன்றிய நிதிக்குழு நிதியில், தமிழ்நாடு கிராம ஊராட்சிகளுக்கான அடிப்படை நிதியாக கடந்த 08.05.2021 அன்று ரூபாய் 533.2 கோடி (RLB Release No.4/2021-22) நிதியும், 12.05.2021 அன்று, நிலுவைத் தொகை ரூபாய் 548.48 கோடி (RLB Release No.6/2021-22) நிதியும் தமிழகத்திற்கு விடுவிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இது தவிர, குறிப்பிட்ட செலவினங்களுக்காக மட்டும் பயன்படுத்த வேண்டிய நிதி (Tied fund) இம்மாதம் 07.05.2021 அன்று சுமார் 901.75 கோடி (RLB Release No.3/2021-22) தமிழகத்திற்கு ஒதுக்கி ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால், இவையெதுவும், கிராம ஊராட்சிகளை வந்தடையவில்லை.

தமிழகத்துக்கு வரவேண்டிய ஆயிரக்கணக்கான கோடி ஜிஎஸ்டி தொகையை ஒன்றிய அரசு நிலுவை வைத்துள்ளது என ஆதங்கத்தை வெளிப்படுத்தும் தமிழக அரசு, உள்ளாட்சிகளுக்கு நிதிக்குழு நிதியை நிலுவை வைப்பது சரியல்ல. உள்ளாட்சிகளின் பிரச்னைகளையும் ஊராட்சி பிரதிநிதிகளின் ஆதங்கத்தையும் அரசு உணர வேண்டும்.

எனவே, தமிழ்நாடு அரசுக்கு கீழ்கண்ட கோரிக்கைகளை முன்வைக்கிறோம்.

1. நிலுவையிலுள்ள தமிழ்நாடு மாநில நிதிக்குழு நிதி மற்றும் ஒன்றிய நிதிக் குழு நிதி ஆகியவற்றை உடனடியாக கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஒவ்வொரு ஊராட்சிக்கும் விடுவிக்கப்படும் மாநில மற்றும் ஒன்றிய நிதிக்குழு நிதியின் விவரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குத் தெரிவிப்பதுடன், அவற்றை அரசின் இணையதளத்திலும் வெளியிட வேண்டும்.

இந்த நிதிகளை விடுவிக்க ஏற்படும் தாமதம், ஒவ்வொரு நாளும் பெரும் நடைமுறைச் சிக்கலை ஊராட்சிகளுக்கு உருவாக்குகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, அரசு விரைந்து செயல்பட வேண்டுகிறோம்.

மிக்க நன்றி!

தங்கள் உண்மையுள்ள,



**(நந்தகுமார் சிவா)**

**For தன்னாட்சி, மக்களின் குரல் (Voice of People),**
**அறப்போர் இயக்கம், தோழன் இயக்கம் மற்றும்**
**Institute of Grassroots Governance (IGG)**